# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:213/மா/2025**

**நாள்: 29.01.2026**

S. மீனாட்சிசுந்தரம்
சென்னை–600 044 --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–600 044, குரோம்பேட்டை, மாணிக்கம் நகர், கதவு எண்.4 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.மீனாட்சிசுந்தரம் என்பவரின் 13.05.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.05.2025 அன்று பெறப்பட்டு 213/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 044, குரோம்பேட்டை, மாணிக்கம் நகர், கதவு எண்.4 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.மீனாட்சிசுந்தரம் என்பவர் தனது 13.05.2025 நாளிட்ட மனுவில் இணைத்தனுப்பியுள்ள 21.03.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

‘‘பல்லாவரம்–குரோம்பேட்டை – நெமிலிச்சேரி ஏரியை பராமரிக்க கோரி, கழிவு நீர் கலப்பதை தடுக்க கோரி பல வருடங்களாக மனு கொடுத்து இதுவரை பலனில்லை. ஆகையால் தாங்கள் தலையிட்டு, வருங்கால சந்ததிகள், பிராணிகள், பொதுமக்கள் நலன் கருதி, ஏரியை தூர்வாரி, கழிவுநீர் கலக்காமல் பாதுகாத்திட நடவடிக்கை எடுக்க ஆவண செய்யுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். ‘‘ எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 20.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி உதவி ஆணையாளர் தனது 19.01.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 0235/2026/இ1/ம3–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

“தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 எல்லைக்குட்பட்ட நெமிலிச்சேரி ஏரியில் கழிவு நீர் கலப்பதை தடுத்து ஏரியினை பராமரிக்க கோரி 13.05.2025 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் கோரியுள்ளார். மேற்காணும் நெமிலிச்சேரி ஏரி பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதாரபிரிவின் பராமரிப்பிலும், கட்டுப்பாட்டிலும் அமைந்துள்ளது.

மனுதாரரின் கோரிக்கையினை தாம்பரம் மாநகராட்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்ட முந்தைய பல்லவபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இப்பகுதி மாநகராட்சி மண்டலம் 3–க்குட்பட்ட பகுதியில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இப்பொருள் சார்ந்து செங்கல்பட்டு மாவட்ட பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார பிரிவில் கோரப்பட்ட நிலையில், மேற்காணும் ஏரியினை மேம்பாடு செய்ய அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 23.01.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர்கள் திரு. S. மீனாட்சிசுந்தரம் மற்றும் முனைவர் லயன் கோவிந்தராஜன் ஆகியோர் 23.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"பல்லாவரம்–குரோம்பேட்டை–நெமிலிச்சேரி ஏரியை பராமரிக்க கோரியும், கழிவு நீர் கலப்பதை தடுக்க கோரியும், 2014 முதல் மனு கொடுத்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இருப்பினும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் அனுமதிக்கு இணங்க 2019ம் ஆண்டு எங்கள் நல சங்கத்தின் சார்பாக சுமார் ரூ.27,00,000/– மதிப்பீட்டில் மேற்கண்ட ஏரி தூர் வாரப்பட்டது. இதன் காரணமாக ஏரியின் தண்ணீர் சுத்தப்படுத்தப்பட்டு சுற்றுப்புறங்களில் உள்ள 8 கிராமங்கள் பாசன வசதி பெற்றது மற்றும் நிலத்தடி நீர் உயர்ந்தது. ஆனால், தாம்பரம் மாநகராட்சி இந்த ஏரியினை பராமரிக்க தவறியதால் ஏரியில் குப்பை மற்றும் கட்டிட கழிவுகள் கொட்டப்பட்டதாலும் மற்றும் ஆகாய தாமரையாலும் ஏரியின் நீர் மாசு அடைந்து விட்டது.

2021–ம் ஆண்டு மீண்டும் சுமார் ரூ.25,00,000/–ல் மேற்கண்ட ஏரி எங்கள் நலசங்கத்தால் தூர் வாரப்பட்டது. ஆனால், கழிவு நீர் இணைப்பு வீடுகளுக்கு முறை கேடாக தாம்பரம் மாநகராட்சியால் அளித்த காரணத்தினால் கழிவு நீர் ஏரியில் விடப்பட்டு ஏரியின் தண்ணீர் மாசுபட்டு விட்டது. ஆக்கிரமிப்பு காரணமாக ஏரியின் பரப்பளவு குறைந்துவிட்டது. சமூக விரோத செயல்களும் நடைபெற்று வருகிறது.

எனவே, மேற்கண்ட ஏரியினை தாம்பரம் மாநகராட்சியால் காலஇடைவெளியில் முறையாக பராமரிக்கவும், முறைகேடாக கழிவு நீர் விடுவதை தடுக்கவும், ஆகாய தாமரை அகற்றவும், தாம்பரம் மாநகராட்சியால் உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறும் கூடிய விரைவில் புனரமைப்பு வேண்டும் என்றும், இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். தாம்பரம் மாநகராட்சி உரிய நடவக்கை எடுக்கவில்லை எனில், தாம்பரம் மாநகராட்சி முன் எங்கள் நலசங்கத்தின் சார்பாக போராட்டம் நடத்தப்படும் என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சி இளநிலை பொறியாளர் 23.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 எல்லைக்குட்பட்ட நெமிலிச்சேரி ஏரியில் கழிவு நீர் கலப்பதை தடுத்து ஏரியினை பராமரிக்க மனுதாரர் கோரிய நெமிலிச்சேரி ஏரி பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார பிரிவின் பராமரிப்பிலும், கட்டுப்பாட்டிலும் உள்ளது.

மனுதாரர் தெரிவித்த மேற்கண்ட நெமிலிச்சேரி ஏரியில்,

1) குப்பை மற்றும் கட்டிட கழிவுகள் கொட்டப்பட்டு இருந்ததை தாம்பரம் மாநகராட்சியால் அகற்றப்பட்டுவிட்டது. இருப்பினும் தாம்பரம் மாநகராட்சியால் அங்கு குப்பை கொட்ட தடைசெய்யப்பட்டுள்ளது என்ற பலகை அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2) மேற்கண்ட ஏரியில் கழிவு நீர் விடப்படும் இணைப்புகளை ஆய்வு மூலம் கண்டறிந்து அவ்வீட்டின் உரிமையாளர்களுக்கு உரிய சட்டப்பூர்வமான தாக்கீது வழங்கப்படும். மேலும், தற்போது உள்ள கழிவு நீர் இணைப்புகளை துண்டிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

3) மேற்கண்ட ஏரியில் பொதுமக்கள் குப்பைகளை கொட்டுவதை தடுக்கும் வகையில் கண்காணிக்க ஒரு பணியாளர் நியமனம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4) மேற்கண்ட ஏரியை உரிய முறையில் பராமரிக்க நீர்வள ஆதார துறைக்கு கடிதம் தாம்பரம் மாநகராட்சியின் மூலம் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்கண்ட பணிகளை மூன்று வாரங்களுக்குள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சி உதவி ஆணையாளரின் அறிக்கை, இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

பல்லாவரம்–குரோம்பேட்டை–நெமிலிச்சேரி ஏரியை பராமரிக்க கோரியும், கழிவு நீர் கலப்பதை தடுக்க கோரி அளித்த மனுவின் மீது நடவடிக்கை எடுக்காததால், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் அனுமதிக்கு இணங்க, 2019ம் ஆண்டு தங்கள் நல சங்கத்தின் சார்பாக சுமார் ரூ.27,00,000/– மதிப்பீட்டில் மேற்கண்ட ஏரி தூர் வாரப்பட்டு, ஏரியின் தண்ணீர் சுத்தப்படுத்தப்பட்டு, சுற்றுப்புறங்களில் உள்ள 8 கிராமங்கள் பாசன வசதி பெற்றது மற்றும் நிலத்தடி நீர் உயர்ந்தது என்பதும், தாம்பரம் மாநகராட்சி இந்த ஏரியினை பராமரிக்க தவறியதால், ஏரியில் குப்பை மற்றும் கட்டிட கழிவுகள் கொட்டப்பட்டதாலும் மற்றும் ஆகாய தாமரையாலும் ஏரியின் நீர் மாசு அடைந்து விட்ட நிலையில், 2021ம் ஆண்டு மீண்டும் சுமார் ரூ.25,00,000/–ல் மேற்கண்ட ஏரி தங்கள் நலசங்கத்தால் தூர் வாரப்பட்டது என்பதும், ஆனால், முறையற்ற கழிவு நீர் இணைப்புகள் காரணமாக கழிவு நீர் ஏரியில் விடப்பட்டு ஏரியின் தண்ணீர் மாசுபட்டு விட்டது என்பதும், ஆக்கிரமிப்பு காரணமாக ஏரியின் பரப்பளவு குறைந்து விட்டது என்பதும், சமூக விரோத செயல்களும் நடைபெற்று வருகிறது என்பதும், எனவே மேற்கண்ட ஏரியினை தாம்பரம் மாநகராட்சியால் காலஇடைவெளியில் முறையாக பராமரிக்கவும், முறைகேடாக கழிவு நீர் விடுவதை தடுக்கவும், ஆகாய தாமரை அகற்றவும், தாம்பரம் மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மற்றும் மேற்கண்ட ஏரியினை புனரமைப்பு செய்யுமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 எல்லைக்குட்பட்ட நெமிலிச்சேரி ஏரியில் கழிவு நீர் கலப்பதை தடுத்து ஏரியினை பராமரிக்க மனுதாரர் கோரிய நெமிலிச்சேரி ஏரி பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார பிரிவின் பராமரிப்பிலும், கட்டுப்பாட்டிலும் உள்ளது என்பதும், மேற்கண்ட நெமிலிச்சேரி ஏரியில், குப்பை மற்றும் கட்டிட கழிவுகள் கொட்டப்பட்டு இருந்ததை தாம்பரம் மாநகராட்சியால் அகற்றப்பட்டு விட்டாலும், தாம்பரம் மாநகராட்சியால் அங்கு குப்பை கொட்ட தடைசெய்யப்பட்டுள்ளது என்ற பலகை அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், மேற்கண்ட ஏரியில் பொதுமக்கள் குப்பைகளை கொட்டுவதை தடுக்கும் வகையில் கண்காணிக்க ஒரு பணியாளர் நியமனம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், ஏரியில் கழிவு நீர் விடப்படும் இணைப்புகளை ஆய்வு மூலம்

கண்டறிந்து அவ்வீட்டின் உரிமையாளர்களுக்கு உரிய சட்டப்பூர்வமான தாக்கீது வழங்கப்படும் என்பதும், தற்போது உள்ள கழிவு நீர் இணைப்புகளை துண்டிக்கவும் உரிய நடவடிக்கையும் மற்றும் இவ்வேரியை உரிய முறையில் பராமரிக்க நீர்வள ஆதார துறைக்கு கடிதம் தாம்பரம் மாநகராட்சியின் மூலம் அனுப்புவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், மேற்கண்ட பணிகளை மூன்று வாரங்களுக்குள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சி உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 எல்லைக்குட்பட்ட நெமிலிச்சேரி ஏரியில் ‘‘குப்பை கொட்ட தடைசெய்யப்பட்டுள்ளது’’ என்ற பலகை அமைக்கவும், இங்கு பொதுமக்கள் குப்பைகளை கொட்டுவதை தடுப்பதற்கு ஒரு பணியாளர் மூலம் கண்காணிக்கவும், இங்கு கழிவு நீர் கலக்காமல் இருப்பதற்கு, அங்குள்ள வீட்டின் உரிமையாளர்களுக்கு சட்டப்பூர்வமான தாக்கீது வழங்கவும், அங்குள்ள சட்டத்திற்கு புறம்பாக உள்ள கழிவுநீர் குழாய் நீர் இணைப்புகளை துண்டிக்கவும் மற்றும் ஏரியை உரிய முறையில் பராமரிக்க நீர்வள ஆதாரத் துறையுடன் கலந்தாலோசித்து நிரந்தரமாக பயன்தரக்கூடிய நடவடிக்கையினை எடுக்கவும், மேற்கண்ட பணிகளை மூன்று வாரங்களுக்குள் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தாம்பரம் மாநகராட்சியின் இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, மேற்கண்ட பணிகளை விரைவில் மேற்கொள்ளுமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. S.மீனாட்சிசுந்தரம்,
கதவு எண் 4, மாணிக்கம் நகர்,குரோம்பேட்டை,
சென்னை–600 044.

(2) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி, 28 முத்துரங்கம் தெரு,
தாம்பரம் மேற்கு, சென்னை–600 045.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

நகல்:

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உ.திரி.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

2/2/26

செயலாளர்

2.2.26